சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.


தன்னடக்கம் நம்மிடம் குடிகொள்ளும் போது, நாமும் பெரியமனிதர்கள் வரிசையில் இடம் பெறுவோம்.

— கவி தாகூர்


94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 39-ம் இல.


# இறுதி வார்த்தை பாப்பரசரதே

“யேசுக்கிறிஸ்து நாதர் பேதுருவானவருக்கு தமது திருச்சபையின் மேல் கொடுத்த அதிகாரத்தை எவரும் மாற்றி அமைக்க முடியாது. 2-ம் வத்திக்கான் சங்கம் பாப்பரசரின் அதிகாரம் திருச்சபையில் யாவற்றுக்கும் மேலானது என்று ஊர்ஜிதம் செய்திருக்கின்றது. ஆகவே அண்மையில் நடக்க இருக்கும் மேற்றிராணிமார் சிநொட் சபை தன்னும் பாப்பரசரின் மேலான அதிகாரத்தை ஓர் இம்மியளவும் குறைக்க முடியாது ஆனால் மேற்றிராணிமாரின் ‘சிநொட்’ சபை திருச்சபைக் கருமங்களை பாப்பரசருக்கு நன்குஎடுத்து விளக்குவதற்காகவே 6-வது சின்னப்பபாப்பரசர் தாமாகவே நியமித்திருக்கிறார்.” இவ்வாறு வத்திக்கானில் உள்ள பிரதான அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

## விசுவாசப் பரம்புதல் ஞாயிறு
## 19-10-1969

- வருகிற ஞாயிறுதினம் உலகெங்கும் மறை பரப்பு ஞாயிறாக அனுசரிக்கப்படும்.
- கிறீஸ்தவன் ஒவ்வொருவனும் தான் ஞானஸ்நானத்தில் பெற்ற விசுவாச ஒளியை மற்றவர்க்கும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றான்.
- மறை பரப்பும் பணியிலே எல்லோரும் நேரடியாக ஈடுபடுவது கடினம். ஆனால், அப்பணியில் ஈடுபட்டிருப்பவர் வேண்டிநிற்கும் செபம், தியாகம், தருமம் இவைகளை எல்லோரும் செய்ய முடியும். அப்படிச் செய்வதினால் எவனும் மறை போதகனாகின்றான்.

# அருளப்ப பாப்பரசரின் உயர்குணம்

ஆங்கில நாட்டில் இன்று அங்கிளிக்கன் சபை அதிபராகிய ரும்சே அடிகளாருக்கு முன் இப்பதவியில் இருந்தவர் லோட் பிஷர் என்பவரே. இவர் தமது சீவியத்தில் நடைபெற்ற சுவையான சில சம்பவங்களைப்பற்றி எழுதியுள்ள நூல் அண்மையில் வெளிவந்திருக்கின்றது. ஓர் அத்தியாயத்தில் அவர் வத்திக்கான் சென்று 23-ம் அருளப்ப பாப்பரசரைத் தரிசித்த சம்பவத்தை வர்ணித்திருக்கிறார். அவ்வர்ணனையில் அருளப்ப பாப்பரசரின் பெருங்குணத்தை வானளாவிப் போற்றுகின்றார். அதுமாத்திரமல்ல பிறரது அபிப்பிராயம் நியாமானது என்றால் அதை ஒப்புக் கொள்ளும் உயர்குணம் அவரில் நிரம்ப இருந்ததெனவும் லோட் பிஷர் கூறியிருக்கின்றார். சம்பாஷணையின்போது அருளப்ப பாப்பரசர் பிரிந்திருக்கும் கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க சபைக்கு திரும்பிவர வேண்டும் என்றுகூறி விட்டார். லோட் பிஷர் திரும்ப வரவேண்டுமென்ற கூற்றை ஆதரிக்கவில்லை. திரும்புவதானால் பின்போக்காகும் என்பது அவரது கொள்கை. முன் சென்று சந்தித்துக் கொள்ளலாமே என அவர் பாப்பரசருக்கு எடுத்துக் காட்டினாராம். அதன் பின்பு23-ம் அருளப்ப பாப்பரசர் பிரிந்த சபைகள் திரும்பவேண்டும் என்றபேச்சை விட்டு, முற்போக்கினால் சந்திப்பதென்ற பேச்சையே ஏற்றுக் கொண்டார் என்கிறார் லோட் பிஷர்.

# கொழும்பு ரேயல் கல்லூரிக்கு வேறொரு பெயரா?

நூற்றாண்டு காலமாக இலங்கையின் அரசாங்க முதல்வரிசைக் கல்லூரியாய் விளங்கிவரும் “ரேயல்” கல்லூரியின் பெயரை கன்னங்கரா மாவித்யாலய எனப் பெயர்மாற்ற கல்விவிவகார வட்டாரங்களில் யோசனைகள் நடைபெறுகின்றன. இலங்கையில் இலவசக்கல்வி முறையைப் புகுத்தி, வறியவர்களின் பிள்ளைகளும் உயர்தரக்கல்விபெற வழிவகுத்து, இலவசக்கல்வி முறையின் தந்தைஎன மகுடம்சூட்டப்பட்ட சுதந்தர இலங்கையின் முதல்கல்வி மந்திரியாக அனேககாலம் தொண்டு செய்த திரு. C. W. W. கன்னங்கரா அவர்களின் மேல் இலங்கை மக்களுக்குள்ள மதிப்பை இக்கல்லூரிப் பெயர் மாற்றம் ஓர் அளவுக்கு நிலைநாட்டுமென எண்ணப்படுகிறது. இப்பெயர் மாற்றத்துக்கு எதிர்ப்பு இல்லாமலில்லை.

## விந்தையாயிருக்கிறது

சென்ற வாரம் கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் அதிமேற்றிராசன துணை ஆயர் ஒஸ்வல்ட் கோமஸ் அடிகளார் தலைமை தாங்கி ஆற்றிய பேருரையில் தற்போது தனியார் பாடசாலைகளாய் இயங்கும் கத்தோலிக்க உயர்தர பாடசாலைகள் தேசிய கலாச்சாரத்துக்குத் தக்க கல்வி அளித்துவரக் கூடுமானால் தேசிய கல்வித்திட்டத்தின் துணையாளர்களாக அரசாங்கத்தால் கணிக்கப்படாதிருப்பது விந்தையாயிருக்கின்றது எனக் கூறிப் பிரலாபித்தார். கல்லூரி அதிபர் வண. டொன் பீற்றர் சுவாமியார் தனது அறிக்கையில் வருடாவருடம் சென்றசில வருடங்களாகத் தற்போதைய அரசாங்கத்திடம் நிதி கோரிச் செய்த விண்ணப்பங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று என்றும், பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்தபோது அச்செயல் பிழையெனக் கூறி மிகத் தீவிரமாக எதிர்த்துநின்ற இன்றைய அரசாங்கம் அப்பிழையைத் திருத்தி அமைக்க முன்வராதது மிகக் கோழைத்தனம் எனவும் கூறினார்.

# ஒரே ஒரு துக்கம்

இரு வாரங்களுக்குமுன் ரோமாபுரியில் கருதினால் ஊர்பானி மரணமானபோது அவரது மரணப்படுக்கையைச் சூழ இருந்தவர்களில் 92 வயது நிரம்பிய அவரது தாயாரும் 5சகோதரிகளும் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கவர்கள். மரணத்துக்குச் சில நிமிஷங்களுக்குமுன் அவர்களை அன்புடன் பார்த்து: “அம்மா, சகோதரிகளே எனக்கு ஒரேயொரு துக்கமுண்டு. வரஇருக்கும் மேற்றிராணிமார் “சிநொட்” சபையில் பங்குபெற முடியாதிருப்பதே அத்துக்கம். வத்திக்கானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் எனது பாப்பரசருக்காக என் ஆத்துமத்தைத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கிறேன் எனக் கூறுங்கள்” என்றார் காலஞ் சென்ற கருதினாலடிகள்.

## மந்திரிக்கு நம்பிக்கை இல்லை

நைஜீரியா—பயபிரா உள்நாட்டுப்போரில் சமாதானம் கொண்டுவர இடையறாது பாப்பரசர் 6-வது சின்னப்பர் தந்தை உழைத்துவருகின்றார். சென்றவாரம் நைஜீரியா தேசதகவல் மந்திரி வத்திக்கான் சென்றபோது அவருடன் சமாதானத்தைப்பற்றி ஒருமணித்தியாலமாகப் பரிசுத்த தந்தை கலந்து ஆலோசித்தார். ஆனால், அவரது முயற்சிகள் பயனளித்ததாகத் தெரியவில்லை. தகவல்மந்திரியாகிய திரு. அந்தோனிஎன ஹோறா என்பவர் வத்திக்கானைவிட்டுச் செல்லுமுன் பத்திரிகை நிருபரிடம் “நான் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் நாடு திரும்பவில்லை” என்று கூறினார்.

## கன்னியாஸ்திரி கொல்லப்பட்டார்

நைஜீரியா தேசத்திலிருந்து பிரிந்துபோகப் போராடிவரும் பயபிராவில் முதன்முதலாக ஒரு கன்னியாஸ்திரி நைஜீரியா போர் விமான வெறியர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கன்னியாஸ்திரி சிசிலியாத்தாயார் என்பவரே. கொலைசெய்யப்பட்டபோது சிசிலியாத் தாயாரும் இன்னுமோர் கன்னியாஸ்திரியும் ஒரு வைத்தியசாலைக்கு தங்கள் மோட்டோர் இரதத்தில் சென்று கொண்டிருந்தனர். அந்த இடத்திலேயே தாயார் அவர்களும் மோட்டோர்சாரதியும் மரணித்தனர். ஒருகன்னியாஸ்திரிபயபிராவில் இவ்வாறுதொண்டாற்றும்போதுகொல்லப்பட்டது இதுவே முதல்முறையாகும்.

## திருச்சபைச்சட்ட சீர்திருத்தகுழு

திருச்சபைப் பரிபாலன சட்டங்களைத்திருத்தி அமைக்கப் பாப்பரசால் ஒருகுழு நியமிக்கப்பட்டிருந்தது. இக்குழுவிற்கு பலம் ஊட்டும் பான்மையில் அண்மையில் 4 கருதினால்மாரையும் பரிசுத்த தந்தை நியமித்திருக்கின்றார்.

“கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# .ஞானோபதேசப் பரீட்சை—1969,

## ( மாதிரி வினா )

### ஏழாம் வகுப்பு

**நேரம் : ஒன்றரை மணி. சுட்டிலக்கம்......**

1. பின்வருவன பிழையாயின் "பிழை" என்றும், சரியாயின் "சரி" என்றும் எழுதுக?

அ. ஞானஸ்நானம் அப்போஸ்தலிக்க சேவையில் ஒருவரை உறுதிப்படுத்துகிறது.

ஆ. ஆன்ம வாழ்விற்கு இன்றியமையாதது செபம் ஆகும்: ( )

இ. திருப்பலியில் உந்நதமான பாகம் தேவவசீகர பகுதி ஆகும். ( )

ஈ. நிறை மனஸ்தாபம் இறை அன்பில் இருந்தே பிறக்க வேண்டும்: ( )

உ. பாஸ்கா பரமஇரகசியத்தை நினைவு கூரும்நாள் செவ்வாய்க்கிழமை ( )

ஊ. பொய்யை மெய்யாக்க ஆணையிடுதல் பாவம் ( )

எ. சுவிசேஷத்தின் வழியாக யேசு எம்முடன் பேசுகிறார் ( )

ஏ. திருப்பலிப் பூசையில் நாம் பங்குபெற உரிமைகிடைப்பது ஞானஸ்நானத்தால் ஆகும்: ( )

ஐ. அறியாதவர்கட்கு கற்பித்தல் உடலைச் சார்ந்த நற்கிரிகை. ( )

ஒ. போர்த்துக்கேய அதிகாரிகள் மக்களிடையே சமாதான முறையில் சமயத்தைப் பரப்பினர் ( )

2. A பகுதிக்குப் பொருத்தமாக B பகுதியில் இருந்து இலக்கம் இடுக?

| A. | B. |
|---|---|
| அ. வேத கலாபனைகளால் ஆகும் பலன்கள். | 1. விசுவாசம். |
| ஆ. மனச்சான்றை உறுதிப் படுத்துவன. | 2. கற்பு: |
| இ. தேவனைப் புகழுதல். | 3. பத்துக் கற்பனை. |
| ஈ. கடவுளுக்கு விருப்பமான புண்ணியங்களில் ஒன்று | 4. திருச்சபை பரம்பல். |
| உ. ஆன்மாவையும் உடலையும் காப்பாற்றல். | 5. தேவநற்கருணை. |
| ஊ. புனிதவாழ்வு வாழவழி | 6. நுழைவு கீதம். |
| எ. தபசுகாலத்தில் மனஸ்தாபத்தின்வெளி அடையாளம். | 7. 5-ம் கற்பனை. |
| ஏ. கடவுள் வெளிப்படுத்தியதை ஏற்றுக்கொள்ளும் புண்ணிய முயற்சி. | 8. புதிய கட்டளை. |
| ஐ. பிறரை அன்பு செய்தல்: | 9. பெற்றோர். |
| ஒ. இவ்வுலகில் கடவுளின் இடத்தை வகிப்பவர். | 10. விபூதி. |

3. மிகப்பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக?

அ. எம் வாழ்வில் மிகப் புனித நாள் ?..........................
பிறந்தநாள், முதல் நன்மை பெற்றநாள், ஞானஸ்நானம் பெற்றநாள்.

ஆ. ஞானஸ்நானம் பெற்றபோது திருச்சபையிடம் கேட்டது? .................. தேவனின் பிள்ளையாகும் வரம், விசுவாசம், மோட்சம் அடையவழி.

இ. நோயாளரைச் சந்தித்து ஆறுதல் செய்வது............
ஆன்மாவைச் சேர்ந்த நற்கிரிகை, சமூகசேவை, உடலைச் சார்ந்த நற்கிரிகை.

ஈ. கடவுள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நினைவு கூர்ந்து நம்பிக்கை கொள்ளும் காலம் ..............
பாஸ்குக் காலம், ஆகமனகாலம், தூயஆவியின் காலம்.

உ. நித்திய சீவியம் என்பது........................................
வானக மாட்சியை விசுவசிப்பது, ஞானஸ்நானத்தை தொடர்ந்துவரும் சீவியம். ஏகமெய்யான கடவுளையும் அவர் அனுப்பிய கிறீஸ்துவையும் அறிந்து கொள்வது.

4. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான மூன்று விடைகள் தருக?

அ. கடவுளை அறிந்து கொள்ள மூன்று வழிகள் தருக?

ஆ. யேசுநாதர் செபஞ்செய்த தருணங்களில் மூன்றை எழுதுக?

இ. கடவுளின் முக்கிய கற்பனைகளின்படி அன்பு செய்ய வேண்டியவர் மூவர்?

ஈ. செபத்தின் முக்கிய குணங்கள் மூன்று?

உ. சாவான பாவத்திற்குரிய நிபந்தனைகள்?

5. இடைவெளியில் பொருத்தமான சொல்லைவைத்து நிரப்புக?

அ. ஒருமனிதன் இவ்வுலகில் அடையக்கூடிய பெரும் கொடை.........................

ஆ. மனித உள்ளத்தில் எதுசரி எது தவறுஎனப் பகுத்தறியும் வல்லமை............................

இ. எல்லா மனிதர்களையும் இன மத வேறுபாடு இன்றி நாம்...................................வேண்டும்.

ஈ. கன்னிமரி வாழ்க்கையின் முதல் வினாடி தொட்டே .......................................விளங்குகிறார்.

உ. நற்கருணை பெற ஆயத்த செபம்..............................

ஊ. தூயஇருதயம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள்.....................................

எ. மனச்சாட்சியை ஆராய்தல்...................எனப்படும்

ஏ. உண்மையின் ஊற்று.......................

ஐ. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கிறீஸ்து சமயத்தைப் பரப்ப உதவி செய்த அரசன்.............

ஒ. மன்னன்...... ....................... ஆட்சிக்காலத்தில் கோட்டை இராச்சியத்தில் திருச்சபை வளர்ந்தது.

6. பின்வருவன மாறி நிற்கின்றன கால முறைப்படி ஒழுங்கு செய்க?

அ. ஆகமனகாலம், தூய ஆவியின்காலம், பாஸ்குக் காலம், தபசுகாலம்.............................

ஆ. எழுந்தேற்றம், அப்பரசம் ஒப்புக்கொடுத்தல், சமாதானச் செபம் பரலோகமந்திரம்.

இ. யேசுவின் 1-ம் வருகை, சிலுவைப்பலி, யேசுவின் இரண்டாம்வருகை, இராப்போசனம்....................

ஈ. மனஸ்தாபம், சங்கீர்த்தனம், ஆத்துமசோதனை, பரிகரிப்பு...........................................

உ. கண்டிவேதபோதகம், கோட்டை வேதபோதகம், மன்னார்வேதகலாபனை, யாழ்ப்பாண வேதபோதகம்

7. கோயில்பூசுதலுக்கு உமது வீட்டுக்கு I. வருமுன்னும்
II. வந்திருக்கும் போதும்
III. குருசென்ற பின்னும்

உமது கடமையை விபரித்து ஓர் கட்டுரை வரைக?

---

✠

## நினைவு கூருவோம்

### திருமதி வெரோணிக்கம்மா யோண்ராஜா
### இறைவனடி சேர்ந்த 3-ம் வருட ஞாபகம்

மறைவு: 15—10—66

"நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக் கொடுத்தருளும் சுவாமி; முடிவில்லாத ஒளி பிரகாசிக்கக்கடவது; சமாதானத்தில் இளைப்பாறுவாவாக."

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஐப்பசிமாதம் 16-ம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு அச்சுவேலி, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசிகள், கன்னியர், மற்றும் இனசனர், சிநேகிதர் யாவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக்கும்படி பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிள்ளைகள்: பயஸ் காராளசிங்கம், திருமதி யோசேப்பின் யோசவ், அகஸ்ரின் இராசா, வண. பிதா லீயோ துரைசிங்கம், ஓ. எம். ஐ., திருமதி றெஜினா சவரிமுத்து.

'காராளகிரி', அச்சுவேலி. 123|69.

---

### யோசெவ் கிறிஸ்ரி துரைசிங்கம் செல் ஜோர்ஜ்
### மறைவின்
### 3-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 29—3—1923. இறப்பு: 17—10—66

சீவியத்தில் இவரை நாம் நேசித்தோம். நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இட்டுச்செல்லும் இவரை நாம் கைவிடாதிருப்போமாக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (17-10-69) காலை 6 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடல் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் குருமார், கன்னியாஸ்திரிமார், தாய், சகோதரர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரது ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவுடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறுவோர். தாய்: இராயக்கினி சகோதரர்: அன்ரன், யோண், சாள்ஸ், விக்ரர், அல்விறேட்.

124-69

---

## நீ பள்ளியில் படிக்கின்றாயா ?

வருகிற ஞாயிறு வேதப் பரம்புதல் தினம். இந்த வாரத்தில் உனது செபங்களெல்லாம் வேதம் பரம்புதற்காக .........

இந்த வாரம் நீ ஒறுத்தல் செய்து சேர்க்கும் பணத்தை விசுவாசப் பரம்புதற் சபைக்குக் கொடுப்பாயா?

---

****************

திருவருட்சாதனங்கள் பற்றிய இறையியல் விளக்கம

"உறவாடும் இறைவன்"

*

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பொதுநிலையினரின் விளக்கம்

"பொதுநிலையினரின் பொற்காலம்"

கிடைக்குமிடம்:
சென் மைக்கல் ஆட்ஸ் ஸ்ருடியோ,
6-10, ஐம்பெற்று ஸ்ரீற்,
கொழும்பு—13.

****************

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரி. சதா சகாயத் தாயாரினதும், புனித சூசை முனிவர், கைவிடப் பட்டவர்களின் பாதுகாவலர் அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார் இவர்களினதும் வேண்டுதலினால் என் மகன் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

நன்றியுள்ள தாய்
மன்னார்

*   *   *

யேசுவின் திரு இருதய இரக்கத்தினாலும், அர்ச். சதாசகாய மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினாலும் ஒன்றரை வருடங்களாக இருந்த நோய் திடீரென்று குணமாகியதையிட்டு நேர்த்தியின்படி நன்றியைத் தெரிவிக்கிறேன். யேசுவின் திரு இருதய நாமம் எங்கும் புகழப்படுவதாக.

உடுவில் ம. அ: றஜினிதேவி
126-69.

*   *   *

திவ்யநற்கருணைநாதரின் கருணையாலும். திருச்செபமாலை மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னத்திரேசம்மாள், அர்ச். றீற்றம்மாள் இவர்களின் வேண்டுதலினாலும் எமது குடும்பத்தில் என்றுமே நீங்காதென்று நினைத்திருந்த கஷ்டம் அற்புதமாக நீக்கியுள்ளது, இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக. பிரசுரதாமதத்திற்கு மன்னிப்புக்கோருகிறேன்.

சில்லாலை ஓர் அடியாள்.
125-69.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகை வெடித்த மொட்டு

மலர் என்றாலே ஒரு தனி யழகு! அம்மலரைக் காணும் மதிபடைத்த மானிடனின் மனமும் மலர்கின்றது. அம்மலர் மலராகுமுன் செடியிலே ஓர் அரும்பு; மலர்ச் செடியை வளர்த்தவனின் இதயத்திலே, இன்ப உதயம். களிகொண்ட வண்டினங்கள் ஏங்கிக் கிடக்கின்றன அதன் மதுவைச்சுவை பார்க்க. காலம் வந்தது; முகை வெடித்தது மொட்டு; ஓரிரு இதழ்களை விரித்தது. உடையவன் வந்தான்; தடையின்றிப் பறித்தெடுத்தான். இதழ் விரித்த அம்மொட்டினை இன்பமுடன் கொண்டு சென்றான். ஆம். அந்த முகை வெடித்த— இதழ் விரித்த மொட்டினை யொத்தவள்தான் நம் புனிதை தெரேசாள். வாழ்வின் வைகறையில் இறைவனை அன்பு செய்யத் தொடங்கினுள். பாலிய வயதினில் இப்பாரினைத் துறந்து, தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தாள். வாலிப வயதினில் அவரால் ஆட்கொள்ளப்பட்டு, இம்மையை நீத்து மறுமையை நாடினுள்.

இவ்வுலகில் அவள் வாழ்ந்த காலமோ சொற்பம். ஆயினும், இறைவன் அவளைத் தகுதியெனக் கண்டார். அவள் ஓர் சாதாரண பெண்ணாக இருந்தும், அவளைக் கொண்டு இறைவன் உலகினுக்கு அரிய மாதிரிகை காட்டியுள்ளார். அன்புப் பெற்றோரால் அருமையாக வளர்க்கப்பட்டாள். காலம் அவள் அன்னையைப்பிரித்து வான்வீடு கொண்டுசென்றது. துன்பத்தின் சாயலைச்சற்றுச் சுகிக்கத் தொடங்கினுள். இயல்பாகவே கிளர்ந்தெழும் அவள் இயற்கைக் குணங்களும் இடைக்கிடை அவளை இன்னல்செய்தன. இளமை தொட்டு இறைபன்பில் வழி நடக்கக் கற்றுக் கொண்ட அவள், அந்த அன்பிற்காகவே அனைத்தையும் துறந்து துறவியானுள். அவளை ஏற்றுக் கொண்ட கார்மேல் இல்லமும் அவளைத் துன்பத்தில் புடமிட்டது. அவள் சென்ற இடமெல்லாம் பரித்தியாகமும், சேவையும் எதிர்கொண்டழைத்தன. துன்பத்தின் மத்தியிலும் இன்பத்தைக் கண்டாள். ஒவ்வொரு செயலையும் இறையன்பிற்காகச் செய்தாள். சகலத்திலும் ஒரு குழந்தையைப் போன்று பரலோக தந்தையின் கரங்களில் தங்கி வாழ்ந்தாள். ஓர் நோயாளியாக இம் மண்ணில் சீவித்த தன் இறுதி நாட்களிலும் நீண்ட தன் பொறுமையினுலும், தாழ்மையினுலும், அமைதியினுலும் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினுள். தன் வாழ்வை விசேஷமாகக் குருக்களுக்கென்றே அர்ப்பணம் செய்து தினமும் அவர்கட்காக வேண்டிவந்தாள். தன் இறுதிமூச்சிலும், "இறைவா! உன்னை நேசிக்கிறேன்" என்று கூறியே விண்ணை நோக்கிப்பறந்தாள்.

இறைவனையடையப் பல வழிகண்ட பலருள் சிறுவழி கண்ட சிறுமலர். தெரேசாளும், தன்னைப்போன்ற எளிமையான உள்ளங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள். எதற்கும் சிறு பிள்ளையைப் போன்று இறைவனில் தங்கிவாழ்வது, அத்தந்தையின் அன்புக் கரங்களில் அனைத்தையும் அளித்துவிடுவது, அவர் அரவணைப்பில் அத்தனை இன்னல்களையும் மறந்து வாழ்வது. இதுதான் அவள் கண்ட சிறுவழி. ஆம். இத்தகைய வாழ்க்கை நடாத்தும் உள்ளத்திலே எத்தகைய அமைதி. கலக்கம் என்பதற்கு இலக்காகாது அந்த இதயம். இறைவனின் அன்புக் கரங்களில் இன்பமுடன் இளைப்பாறும்.

இவ்வுலக வேதனையைத் தன் சாதனையால் வென்றவள் அப்புனிதை. அன்பு எங்குண்டோ அங்கு வேதனையுமிருக்கும். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. கவிஞர் வாலி வருணித்த, 'பொன் வண்டு தீண்டாத மல்லிகையுமல்ல; பூந்தென்றல் கொஞ்சாத தாமரையுமல்ல; விண் மேகம் மூடாத வெண்ணிலாவுமல்ல' அவள் வாழ்க்கை. மாறாகத் துன்பத்தில் புடமிடப்பட்ட வாழ்க்கை. கட்டுப்பாடின்றிச் சுதந்திரமில்லை; பரித்தியாகம் இன்றி முன்னேற்றமில்லை; வேதனையின்றி அன்பில்லை' என்பதன் உண்மையைத் தன் வாழ்க்கையினுல் உண்மைப்படுத்திக் காட்டினுள்.



இறைவனை அன்பு செய்தாள். அதே அன்பினுல் அகிலம் அனைத்தையும் அரவணைத்தாள். இயல்பாகவே தனக்கிருந்த சுயநலத்தை அடிபணியச் செய்து, அகில உலகின் இரட்சணியத்திற்காகவும் தன் ஒவ்வொரு செயலையும் செய்தாள். திருச்சபையில் தனக்குள்ள பொறுப்பை நன்குணர்ந்து மறைபரப்புப் பணிக்

## மொட்டு

காகத் தினமும் வேண்டிவந்தாள். வேதபோதக ஆர்வம் மீதூரப் பெற்றவளானமையால், திருச்சபை அவளை 'வேதபோதக நாடுகளின் பாதுகாவலியாகப் பிரகடனப் படுத்தி, அவள் திருநாளை ஐப்பசி 3-ம்திகதி கொண்டாடி வருகின்றது. கார்மேல் மடத்தின் சுவர்களின் மத்தியில் வாழ்ந்திருப்பினும், தன் அப்போஸ்தலிக்க சிந்தையினுல் அனைத்துலக மறைபரப்புப் பணியிலும் ஈடுபட்டாள். தன் சீவிய காலத்தில் நற்செய்தி ஏட்டை ஏந்தி நிற்கவுமில்லை; மேடையில் முழங்கவுமில்லை; கடல்கடந்து செல்லவுமில்லை; இரத்தம் சிந்தவுமில்லை. எனினும் இந்திய நாட்டின் அப்போஸ்தலரான புனித சவேரியார் போன்றோர் வரிசையில் வைத்துப் போற்றப்படுகின்றாள்.

தான் குருக்களின் அப்போஸ்தல அலுவல்களில் உற்ற துணையாக இருக்க வேண்டுமென்பதே அவளது ஆவல். அவர்களின் வாழ்வு இறைபணிக்காக அர்ப்பணம் செய்யப்பட்டது. அவர்கள் உலகத்தை விட்டுப்பிரிந்திருந்தாலும், உலகத்திலேயே சீவிக்கிறார்கள். மனிதர் என்ற முறையில் பெலவீனமுடையவர்கள். உலக இன்பங்களின் சோதனையையும், தனிமையையும், துன்பங்களையும், சில வேலைகளில் தம் பலிசீவியத்தில் பலன் கிட்டாமையையும் உணரும் மனித இதயத்தையுடையவர்கள். இவைகளை உணர்ந்தறிந்த நம் புனிதை அவர்கட்காகச் சிறந்தமுறையில் வேண்டினுள், அவ்வாறு வேண்டுவதன் மூலம் நிறைவேற்ற முடியாததன் ஆவல்களையும் நிறைவேற்றிக்கொண்டாள். இதோ அவள் கூறுவது, "யேசுவே! உலகம் எங்கும் சென்று நற்செய்தியைப் போதிக்கவும், அஞ்ஞான நாடுகளில் சிலுவைக் கொடியை நாட்டவும் ஆசிக்கின்றேன். ஆனுல், மகத்தான கிரியைகளைச் செய்ய என்னுல் முடியாது. போர்புரியவோ, இரத்தம் சிந்தவோ என்னுல் இயலாது. அதனுல் என்ன? எனக்குப் பதிலாக என் சகோதரர்கள் உழைக்கிறார்கள். சிறுமியான நானே சிம்மாசனத்தின் அருகில் நிற்கிறேன். போர்புரியும் அனைவர் பேராலும் உம்மை நேசிப்பேன்."

இந்த அன்பு ஒன்றுதான் அவள் கண்ட சிறியவழி. இலகுவானவழி. எவரும் கைக்கொள்ளக்கூடிய இன்பவழி. துன்பத்தையும் இன்பத்தோடு வரவேற்கும் இனியவழி. இரட்சணியம் பெறத்தக்க நிச்சயவழி. இவ்வழியைப் பின்பற்றின் இப்போராட்டம் நிறையுலகில் திடமாய் வாழ்வோம். அன்பினுல் இவ்வுலகினை வென்று, என்றும் நிலைத்து நிற்கும் இறையன்பில் திளைத்திருப்போம். அந்தப் புனிதையிடம் வேதபோதகர்களுக்காக வேண்டிக் கொள்வோம். வெடித்த முகையுடன் கொய்தெடுக்கப்பட்ட மொட்டானது, பாகதியில் நின்று தன் அழகினையும், நறுமணத்தையும், அள்ளியெறிந்து இப்பாரினைத் தூய்மை செய்யுமாறு வேண்டுவோம்.

(திஸ். எம். பொன்வேந்தரு)

# திறவுங்கள் தயவுசெய்து

ஐந்தாண்டுத் திட்டங்களின் காலம் இதுவாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் என்னும் போது, நவமான வீதிகளையோ, புகையிரதப் பாதைகளையோ, தொழிற்சாலைகளையோ, பாலங்களையோ, மற்றும் விவசாயப் பண்ணைகளையோ, வியாபார நிலையங்கள் முதலானவைகளையோ அமைப்பதில் தீவிர அபிவிருத்திகளைக் காணுமுகமாக வகுக்கப்படும் காரியக்கிரமங்களையே அது கருதும். தகுந்த வழிதுறைகளைக் கண்டறிந்து, சரிவரத் திட்டங்களை வகுத்து, அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலுள்ள பாரமான கடமையைத் தவிர, நமது கௌரவமந்திரிமாருக்கு மற்றும் ஒருபொறுப்புவாய்ந்த கடமையிருக்கிறது. அதாவது அவைகளைத் திறந்து வைப்பதே.

இதுசம்பந்தமான திறப்பு விழாஒன்றில் கலந்துகொள்ளும் ஒருசந்தர்ப்பம் நமக்குக் கிடைத்திருக்குமா? அப்படியானுல், அதைப்பற்றிச் சிறுக வர்ணித்தெழுவது அத்துணை கஷ்டமான ஒருகாரியமாயிராது. வரவேற்புக் கழகத்தலைவர் அங்கே கவினுற அமைக்கப் பட்டிருக்கும் பந்தரின் வாயிலில் காத்துநின்று மலர்மாலை சூட்டி மந்திரியாரை மரியாதையாக வரவேற்பார். பின்னர் மற்றும்சில பிரமுகர்கள் சமேதராய் அவரை உயர் மேடைக்கு அழைத்துச் செல்வார். அதில்ஏறியதும் மந்திரியார் எழுந்துநின்று தாம் திறந்துவைக்கப் போவதை முன்னின்று நடாத்திமுடித்த முகாமைக்காரர், எஞ்ஜினியர்மார், தொழிலாளர் முதலானோரை வானமட்டாக உயர்த்திப் பேசுவார். அன்னாரின் ஆற்றலை வாயாரப்புகழ்ந்து நீண்ட ஒருசொற்பொழிவு நிகழ்த்துவார்.

அம்மட்டா! அரசாங்கம் மக்களுக்குச் செய்துவரும் அளப்பருஞ்சேவைகள், ஆற்றியிருக்கும் அரும்பெரும் நன்மைகளைப் பரக்களடுத்துக்கூறி அதற்கும் புகழ்மாலை சூட்டுவார். மேலும், அடுத்த பொதுத்தேர்தலை ஞாபகத்தில் கொணர்ந்து அதிலும் இந்த அரசாங்கத்தையே தேர்ந்தெடுக்க வேண்டுமென யாவர்க்கும் ஒருவேண்டுகோள் விடுப்பார். அதன்மேல் களியாட்டுகளோ, கதம்பக் கச்சேரிகளோ பரிமளிப்பாக நடந்தேறும்.

இதனை வரையும்போது ஒரு முறை லண்டன் நகரில் நிகழ்ந்த ஒருதிறப்புவிழாவின் ஞாபகம் வருகின்றது. அக்காலம் பெயர் பெற்ற எழுத்தாளரும், பேச்சாளருமாக விளங்கிய ஹிலேயர் பெல்லக்என்ற பேரறிஞர் அங்கே ஒருசந்தையைத் திறந்து வைக்கும்படியாய் அழைக்கப்பட்டிருந்தார். அத்தருணம் அவர் நிகழ்த்திய சுருக்கமான—பெரிதும் நகைச்சுவை பொருந்திய சொற்பொழிவு வாசகர்களின் நலன் கருதி ஈண்டு பொழிப்பாகத் தரப்படுகின்றது,

— உலகில் திறப்பதற்குப் பெருந்தொகைக் கருமங்கள் இருக்கின்றன. முத்துச் சிப்பிகள், வழக்குகள், மதுபானப் புட்டிகள், போர்முனைகள், புகையிரதப் பெட்டிகள், காட்சிச்சாலைகள், பொருட்காட்சிகள், மாடமாளிகைகள், தேவாலயங்கள் என்பனவாய்ப் பலப்பல இருக்கின்றன. ஆயினும் இருப்புப் பெட்டிகள்போன்ற சில திறப்பதற்குக் கடினமானவைகள். இறந்தவர்களின் உதடுகள்போன்றசிலதிறந்துவைக்க முடியாதவைகள். ஆனுல், சில திறப்பதற்கு அதிகம் இலகுவானவைகள். இதுபோலும் சந்தைகள் பிந்தியவரிசையில். உள்ளன. அதனுல் இதனைச் சுலபமாகவும், மகிழ்ச்சியோடும் திறந்துவைக்கின்றேன். ஆயினும் சரேலெனப் படம் பிடிக்கும் கருவியின் மூடி போன்று சில என்றைக்கும் திறந்தபடியே இருக்கும். சில இந்தச் சந்தையைப்போல் இரண்டொரு தினங்களுக்குத் தான் திறந்திருக்கும்.—

நாமெல்லாம் அதிகம் விலைமதிக்கரிய ஒருபொருளை நம்மில் கொண்டிருக்கிறோம். அதனை நாமல்லாது வேறெவருமே



திறக்கமுடியாது. நாம்மட்டுமே அதைத் திறந்துவிட முடியும். அஃது நம்முடைய சொந்த இருதயமே. அது எப்போதும் நம்முடைய சித்தப்படியே திறக்கப்படுகிறது. நாம் விரும்பினுல் அதைக் கடவுளுக்கும் திறந்துவிடலாம். அன்றேல், உலகத்திற்கும், பாவத்திற்கும் திறந்துவிடலாம். அதனுல் அதைக் கடவுளுக்குத் திறந்துவிடுவதிலும், உலகத்திற்கும், பாவத்திற்கும் அதைமூடிவிடுவதிலும் நாம் சாவதானமாய் இருக்கவேண்டும். கடவுளே நமது முழு எசமானுக இருக்கின்றார். ஆகவே, அவர் விரும்பினுல் அவரால் அதைத் திறக்கமுடியும். ஆனுல், அவர் நமது சுதந்திரத்தை மதிக்கின்றார். அதனுல் அவர் அதில் கைவைக்கமாட்டார்.

சமத்துவமாக மக்கள் வழிபாடுசெய்யும் படியாகக் கோவில் கதவுகளைத் திறந்துவிடுங்கள் என்பது இன்றெழும் ஓரே கூச்சல். சமத்துவமாகப் பிள்ளைகள் கல்விபயிலும் படியாகப் பாடசாலைக் கதவுகளைத் திறந்துவிடுங்கள் என்பது அன்றெழுந்த ஓரேகுரல். ஆனுல். நமது இருதயமாகிய கோவிற் கதவுக்கு — பாடசாலைக் கதவுக்கு வெளியேயிருந்து "திறவுங்கள், தயவுசெய்து" என்று பரிந்துகேட்கும் ஓர் அன்பின் குரல்—அன்பின் அபயக்குரல் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக எழுவதை நாம் கேட்கவில்லையா? பூட்டப்பட்டுள்ள ஒரு கதவுக்குவெளியே திவ்விய யேசு நின்றுகொண்டு அதைத் தட்டுவதைக் காண்பிக்கும் பேரான அந்தச் சித்திரத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லையா? ஆம், அவர் கதவுக்கு வெளியேநின்று அதைத் திறக்கும்படி தட்டினுலும் தாமாகப் பலவந்தமாய் அதைத் திறக்க மாட்டார். திறந்துகொண்டு உட்பிரவேசிக்கவும் மாட்டார். ஆனுல், ஒன்றுமட்டும். "திறவுங்கள், தயவுசெய்து, அது நான்தான், அஞ்சவேண்டாம்" என்றுதான் ஒருவேண்டுகோள் விடுக்கின்றார்.

[மறுபக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் விசுவாசமும் எமது வாழ்வும்

— பி. சவரிமுத்து —

ஒருவருடைய வாழ்வு அவரின் இலட்சியங்களை, கொள்கைகளை அவர் மனத்திலுள்ள அடிப்படையான எண்ணங்களைத் தழுவியனவாகவே இருக்கின்றன என்று நாம் எமது நாளாந்த அனுபவத்தில் அறியக்கூடியதாயிருக்கிறது. ஒருவருடைய இருதயத்திலுள்ள சிந்தனைகளே பெரும்பாலும் அவர் வார்த்தைகளாக வெளிவருகின்றன. அவை செயல்களாகவும் காட்சியளிக்கின்றன. ஆனல், இவ்வுலகில் "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்"களும் இருக்கின்றனர் என்பதை நாம் முற்றாக மறுக்க முடியாது.

பொதுவாகக் கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய இலட்சியங்கள் அவர்கள் தினமும் செபித்துவரும் விசுவாச மந்திரத்திலேயே அடங்கியிருக்கின்றன எனலாம். இச் செபத்தில் 1. பிதா, 2. சுதன், 3. தூய ஆவியானவர், 4. திருச்சபை, 5. தேவதிரவிய அனுமானங்கள், 6. மரித்தோரின் உத்தானம், 7. நித்திய சீவியம் என்ற பிரதான உண்மைகளை நினைவுகூருகின்றனர். அவற்றிற்குச் சாட்சி கூறுவதற்கு அடையாளமாகப் பூசை வேளையில் இச்செபத்தை எழுந்து நின்றே செபித்துவருகின்றனர். கடவுள் எங்களுக்கு அருளிச்செய்த இச்சத்தியங்களே எம் சீவியத்தின் கற்பாறைபோல் காட்சியளிக்கின்றன. இவற்றைச் சற்றுவிரிவாக ஆராய்வது பயனுடைத்து. ஒருவர் "நான் ஒரே சர்வேசுரனை விசுவசிக்கின்றேன்" என்று கூறும்பொழுது அவருடைய வாழ்வில் நீரீச்சுரவாதிக்கொள்கைக்கு அணுவளவேனும் இடமில்லை என்றேகூறவேண்டும். அல்லாமலும் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள், தெய்வங்கள் உண்டென்று ஒருவர் விசுவசித்து வாழ்வதும் தப்பறையானதே. ஆனாலும் இப்பரம தேவனில் ஒரே கடவுளில் மூன்று ஆட்கள் இருக்கின்றனர் என்று நாம் உறுதியாக விசுவசித்து வாழக்கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆள்வகையிலே பிதா, சுதன், தூய ஆவியானவர் என்று மூன்று பேரும் கடவுளாய் இருந்தபோதிலும், ஒரே கடவுளாகவே அவர்கள் இருக்கின்றனர் என்பது ஒரு பரம இரகசியமாயிருக்கிறது. இதையே "திரித்துவம்" என்று கூறுகிறோம். "வானமும் பூமியும் காண்பவை காணாதவையாவும் படைத்த எல்லாம் வல்லபிதா அவரே" என்று நாம் அறிக்கையிடுகிறோம். மனுக்குலத்தை இரட்சித்த மகிமையைத் திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனுக்குக் கொடுத்து வருகிறோம். அவருக்கும் பிதாவாகிய சருவேசுரனுக்குமுள்ள தொடர்பைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறோம். "சர்வேசுரனின் ஏகசுதனைச் செனித்த ஒரே ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் யுகங்களுக்கு எல்லாம் முன்பே பிதாவினின்று செனித்தார். கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, மெய்யங் கடவுளினின்று மெய்யங் கடவுளாகச் செனித்தவர். இவர் செனித்தவர் — உண்டாக்கப்பட்டவர் அல்லர்—பிதாவோடு ஒரே பொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன. மானிடரான நமக்காகவும் நம் மீட்புக்காகவும் வானகமிருந்து இறங்கினார்."

இவருடைய உற்பவம், பிறப்பு வாழ்க்கை, பாடுகள், மரணம், உத்தானம், ஆரோகணம் ஆதிய யாவற்றையும் நாம் விசுவசிப்பதற்கு அத்தாட்சியாகப் பின்வருமாறு அறிக்கையிடுகிறோம். "பரிசுத்த ஆவியினால் கன்னிமரியிடம் உடல் எடுத்து மனிதன் ஆனார். மேலும் போஞ்சியு பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையிலே அறையுண்டு, பாடுபட்டு அடக்கம் செய்யப்பட்டார். வேதாகமத்தின்படியே மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். வானகத்திற்கு எழுந்தருளி பிதாவின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார். சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க மாட்சிமையுடன் மீண்டும் வரவிருக்கின்றார்." அடுத்தபடியாகப் பரமதிரித்துவத்தின் மூன்றாம் ஆளாகியவரைப்பற்றி அறிக்கையிடுகிறோம். "பிதாவினின்றும், சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான பரிசுத்த ஆவியையும் விசுவசிக்கிறேன். இவர் பிதாவோடும், சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார். தீர்க்கதரிசிகள் வாயிலாகப் பேசியவர் இவரே." மேற்கூறியவற்றைவிட எங்கள் விசுவாசத்தின் முக்கிய பங்காயமைகிறது எமது திருமீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதர் ஸ்தாபித்த திருச்சபையும் அதன் மூலம் மக்களடையும் ஞான நன்மைகளும். இவை யாவற்றையும் சுருக்கமாக "ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கத் திருச்சபையையும் விசுவசிக்கின்றேன். பாவமன்னிப்புக்கான ஒரே ஞானஸ்நானத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று நாம் செபித்து வருகிறோம். இதைத் தொடர்ந்து எமது மரணத்துக்குப்பின் எமக்கு நடைபெறவிருக்கும் உத்தானத்தைப்பற்றியும், நித்திய வாழ்வைப் பற்றியும் பகிரங்கமாகப் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றோம். "மரித்தோர் உத்தானத்தையும் வரவிருக்கும் மறுவுலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன்."

எனவே, மேலே கூறப்பட்ட சத்தியங்களை உண்மையாகவே விசுவசிக்கும் ஒருவரின் வாழ்வு எப்படி இருக்கவேண்டுமென்று சுருங்கக் கூறவேண்டுமாயின் அது தேவனை மையமாகக் கொண்டதாயும், மறு உலகவாழ்வை எதிர்நோக்குவதாயும் இருக்க வேண்டும். "எல்லாத்துக்கும் கர்த்தாவாகிய சர்வேசுரன் நாமே; என்னைத்தவிர வேறு சருவேசுரன் உனக்கு இல்லாதிருப்பதாக" என்ற பரம தேவனின் வாக்குக்கமைய நாம் வாழவேண்டும். அதுமட்டுமன்றி இவ்வுலக வாழ்வு மறுவுலக வாழ்வுக்கு ஓர் ஆயத்த காலமென்பதை நாம் மறவாது மறுவுலகில் நித்திய பேரின்ப வாழ்வை நாம் அடையக்கூடிய முறையில் இவ்வுலகில் ஒரு புனித மாணவாழ்வை நாமெல்லவரும் வாழ கடமைப்பட்டிருக்கிறோம்.

# பலவீனரைக்கொண்டு பலமுள்ள காரியங்களைச் செய்யும் கடவுள்

நாம் கடவுளின் மகத்தான செய்கைகளை உற்றுநோக்கும்போது அவர் வலிமையுடையவர்களை அல்ல ஆனல் பலவீனரையே தமது கருவியாகக் கொண்டு, பலமுள்ளோரும் செய்ய அஞ்சும் துணிகரச்செய்கைகளைச் செய்துள்ளார். இஸ்ராயேல் மக்களுக்கு எதிராயிருந்த கோலியாத்எனும் பிலிஸ்திய அரக்கனை ஒருவரும் வெல்லமுடியாதிருந்தனர். ஆனல், தாவீதுஎனும் இடைச்சிறுவனைக் கொண்டு கடவுள் தம் சனத்தை அந்த அரக்கனின் பிடியினின்று காப்பாற்றினார். தாவீது கடவுளைப்பிரார்த்தித்தபின் கூலாங்கல்லொன்றைக் குறிவைத்து எறிந்தபோது அது அவ்வரக்கனின் நெற்றியில் காயத்தை உண்டாக்கி அவனை நிலைதடுமாறி நிலத்தில் வீழ்த்தியது. உடனே தாவீது ஓடிச்சென்று அவ்வரக்கனின் வாளை எடுத்தே அவனைக் கொன்றான்.

ஹொலப்போர்னஸ் எனும் அந்நிய அரசனின் கையினின்று தம்மக்களைமீட்கக் கடவுள் யூடித்என்னும் ஒருபெண்மணியைத் தெரிந்தெடுத்தார். ஒருவரும் போகமுடியாத அரசனின் கூடாரத்திற்கு யூடித் எனும் நல்லாள் செல்கின்றாள். அங்கே கடவுளின் அருளால் அப்பலம்பொருந்திய அரசனை யூடித்எனும் பலவீனமுள்ள பெண் கொன்றுவிடுகிறாள். இப்படியே அநேக சம்பவங்களை நாம் பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கும்போது காண்கின்றோம்.

இச்சம்பவங்களைப் பரிசுத்த வேதாகமத்தின் முன்பகுதியாகிய பழையஏற்பாட்டில் மட்டுமல்ல புதியஏற்பாட்டிலும் காண்கின்றோம். கல்வியறிவற்ற பயந்த செம்படவரையே யேசு தமது அப்போஸ்தலராகத் தெரிந்தெடுக்கிறார். தம்மை மறுதலித்த இராயப்பரையே தாம் ஸ்தாபித்த திருச்சபைக்குத் தலைவராக நியமிக்கின்றார். என்னே கடவுளின் திருவுளம்! என்னே அவரின் மாட்சி!!

எமக்கு மலைபோல் சிலுவைகள் கஷ்டங்கள் வந்தாலும் யேசுவை முழுமனதுடன் நம்பி,

**"பலவீனரைக்கொண்டு பலமுடையோரைத் தடுமாறச் செய்யும் யேசுவின் திவ்விய இருதயமே! பலவீனராகிய எங்கள்பேரில் இரக்கமாயிரும்"**

என்று சொல்லுவோமேயாகில் அதனால் அளப்பரிய நன்மைகளை அடைவோம் என்பது உண்மை.

இச்சிறு செபத்தினால் அநேகர் தங்களால் செய்துமுடிக்க இயலாது என்றுஇருந்த காரியங்களை வெகுஇலகுவில் செய்துமுடித்தனர். என் வாழ்விலும் இதன்பலனைப் பலதடவைகளில் பெற்றேன்.

(ஆ. மே. மா. க.)

## சாகித்தியப் பரிசுபெற்றார்

சமீபத்தில் வெளிவந்த புனித பிரான்சிஸ் அசிசியார் என்னும் நூலை ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தார் ஓர் உயர்தர தமிழ்நூலாகத் தேர்ந்தெடுத்து அதற்காக ஆயிரம்ரூபா பரிசு வழங்கத் தீர்மானித்துள்ளனர். இப்பரிசு எதிர்வரும் 9-ந்தேதி வியாழக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு கொழும்பு றோயல் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சாகித்திய தினவிழாவில் கல்வி கலாச்சார அமைச்சர் கௌரவ ஐ. எம். ஆர். ஏ. ஈரிய கொல்ல அவர்களால் வழங்கப்பட இருக்கிறது.

நாம் அறிந்தவரையில் ஒரு கத்தோலிக்க தமிழ்நூல் இப்பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல்முறையாகும்.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஊர்காவற்றுறை வாசருமாகிய குறித்த நூலாசிரியர் அவர்கள் புனிதர் பிரான்சிஸ் அசிசியாரைப்பற்றி ஆங்கிலமொழியில் எழுதப்பட்டுள்ள இருபத்தைந்துக்கு மேலதிகமான புத்தகங்களைப் படித்து, அவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார்.

புனிதர் பிரான்சிஸ் பிறந்து வளர்ந்து தொண்டாற்றிய அசிசிப்பதியை ஆசிரியர் தரிசித்த தன் பயனாக, புனிதரின் வரலாற்றைத் தத்ரூபமாக வாசகர்கட்கு அளிக்கிறார்.

இந்நூலாசிரியர் "மனிதனின் தேவயாத்திரை" என்பதை மையக் கருத்தாகக் கொண்டு கர்த்தரின் செபமும், கிறீஸ்தவ பூரணத்துவமும் என்ற ஓர் அரிய நூலையும் முன்னரே எழுதியுள்ளார். நூலாசிரியருக்கு எமது பாராட்டுகள்.

## இளவாலையில் கத். கண்காட்சி

இளவாலை புனித ஜேம்ஸ்பங்கின் அன்னைமரி படையணியினர் தமது 10-வது ஆண்டு நிறைவையொட்டி கண்காட்சி ஒன்றை நடாத்தினர். மேற்படி கண்காட்சி புரட்டாசி 25-ம், 26-ம் தேதிகளில் நடைபெற்றது.

சிறுவர்க்கும் பெரியோர்க்கும் ஞான அறிவை நன்கு அளிக்கும் வகையில் இக்கண்காட்சி அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

திருவருட்சாதனங்கள், அவற்றின் நன்மைகள், பழையஏற்பாட்டுப்பலி - புதியஏற்பாட்டுப் பலி, வேதாகமவரலாறு, செபமாலைப்பக்தி வரலாறு, மாதிரிக் கிறீஸ்தவ குடும்பம், மரியன்னை படையினர் வேலைகளில் ஈடுபட்டிருத்தல் என்பன குறிப்பிடவேண்டியவைகளாகும். இன்னும் பாரியசெபமாலை வாயிலில் அனைவரையும் வரவேற்கும் பாவனையில் தொங்கவிடப் பட்டிருந்தது.

உலகின் பல பாகங்களிலுமிருந்து வெளிவரும் ஆங்கில மாதாந்த, வாராந்தகத். சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் (134விதமானவை) காட்சியில் இடம்பெற்றன. இக்காட்சி "பேசும் பேனு"வினல் ஒழுங்கு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் மட்டுமல்லாது குருமாரும் கன்னியர்களும் காட்சியில் பங்கு கொண்டனர்.

கட்டளைக் குரவர் வண. டெசி இக்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில், திறப்புவிழா நடத்துவது தான் மட்டுமல்ல, ஒவ்வொருவரின் நன்மனமும் திறப்புவிழாவை நடத்துகிறதென்று குறிப்பிட்டு இதனை ஒழுங்குசெய்தவர்களைப் பாராட்டினர். சைனியத் தலைவர் J. பெனடிக்ற் வரவேற்புரை நிகழ்த்தினர். காரியதரிசி எஸ். டேவிட் 10ஆண்டு அறிக்கை படித்தார். இ. பேர்ணட் நன்றிகூறினர்.

## திறவுங்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நமது இதயக்கோவிலின் கபாடத்தண்டை நின்று அது எப்பொழுது தமக்குவலியத் திறந்துவிடப் படுமென்று ஆசையாவலோடு காத்துக் கொண்டிருக்கிறார். அதனால் அவரது அன்பின் அபயக்குரலுக்குச் செவிசாய்த்து அதை திறந்துவிடுவோம். தகுந்தவிதமாய் நாம் திவ்விய நன்மை பெறும் ஒவ்வொருதடவையும் நமது இதயக்கோவிலை மனப்பூர்வமாக அவருக்குத் திறந்துவிடுகின்றோம். நம்முடைய இதய சிம்மாசனத்தில் எழுந்தருளும்படியாக அவரை அழைக்கின்றோம். ஆகவே இவ்விதம் யேசுவைத் திவ்வியநன்மையில் பெறுவதற்கான — அவரை எமது இதயசிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்வதற்கான எந்தஒரு சந்தர்ப்பத்தையும் தவறவிடோமென இன்று திடசங்கல்பம் செய்வோம்.

நாடோறும் இல்லையென்றாலும் அடிக்கடியாவது நாம்ஒவ்வொருவரும் திவ்வியநன்மை பெறுவோராய் இருக்கவேண்டும். திவ்வியயேசு பெத்தானியிலே மார்த்தம்மாள் மரியமாவின் இல்லத்தை அடிக்கடி தரிசிக்கும் வழக்கமுடையவராயிருந்தார். அவர் எப்போது வருவாரோவென்று அவர்களும் எத்துணைபெரும் ஆவலுடன் காத்திருந்திருப்பார்கள். தங்கள் எசமானும், அன்பருமான அவர் தங்களுடன் இருந்தபோதெல்லாம் அவர்கள்எத்துணைபேரானந்தம் எய்தியிருப்பார்கள். அவருடைய தட்டுதலைக் கேட்டு, "தயவுசெய்து திறவுங்கள்" என்ற அவரது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கும்போது நாமும் அதே உரிமையைப் பெற்றுக்கொளுகிறோம். சுபம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடவுளை நம்பினோர்....!

"என்ன சேகர்!... ஒருமாதிரியாயிருக்கிறாயே!... அப்படி உனக்கு என்னதான் நடந்தது? சொல்லேன்" என்று கேட்டான் அருமை நண்பன் அமல். சேகர் எதுவும் பதிலளித்தானில்லை. "ஏன் சேகர்! நேற்று உன் அருமை ஆஞ்ஜெலாவுடன் சினிமாப்படம் ஒன்றுக்குச் செல்ல இருந்தாயே. அந்த உல்லாசத்தின் பின்பா இத்தனை மனவாட்டம்?" குடைந்தெடுத்தான் அமலன். "அதையேன் கேட்கின்றாய் அமல்!... அவளும் அவள் பக்தியும்! இன்பமாகப் பொழுதைக் கழிக்கவேண்டிய நேரத்திலே ஏதோ திருமணித்தியாலமாம். அதுவும் இரவு 11மணியில் இருந்து 12மணிவரை. அந்த ஆராதனைக்குப் போய்விடவேண்டுமென்பதற்காக அப்பப்பா!... ... எவ்வளவோ துடித்தாள். நாங்களெல்லாம கத்தோலிக்கரில்லையா? அவள் என்னைப் பெரிதாக மதிப்பதேயில்லை. அத்தகையவளை எப்படித்தான் மனைவியாக ஏற்பதோ!... மனதிலுள்ள கவலையை வார்த்தைகளில் வடித்தான் சேகர். "அப்படிச் சொல்லாதே சேகர்! உன் மனைவியாக வரவிருப்பவள் சமய அநுட்டானங்களில் சிரத்தையுடையவள் என்பதையிட்டுப் பெருமை கொள்ளவேண்டியவன் நீ. எனக்கோ இத்தகைய பாக்கியமில்லையே. தெரியுந்தானே என் ஆருயிர்க் காதலி சசிகலா விஷயம்!..." சொல்லி முடிக்கவில்லை அமலன். "வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்துத்தள்ளிவிட்டது நீயல்லவா? சசிகலாவைப்போல் பணமும், அழகும், பவிசுமுள்ளவள் கிடைக்க நீ தவம்செய்யவேண்டும். உன்னைப்போல— ஆஞ்ஜெலாவைப் போல கோயிற்பூனைகளாக எல்லோரும் இருக்கமுடியுமா?... சசிகலாவின் போக்கை நான் ரொம்பவும் விரும்புகின்றேன். அவளது பிறந்தநாள் மாலை விருந்துக்கு நீ போகாமல் விட்டது எத்தனை பெரிய தப்பு. அவளுக்கு ஆத்திரம் ஏற்படாதா என்ன?" கண்டித்தான் சேகர். சேகர், "ஒருமணி நேரமாவது எனக்கு ஆறுதல் தர முடியாதா" என்று மனம் நொந்து கேட்ட யேசுவுக்கு நாம் ஆறுதல் கொடுக்கவேண்டிய நேரத்தை வீண் சுகபோகங்களில்கழிக்க நான் விரும்பவில்லை. அதைஎடுத்துச் சொல்லியதற்கு சசிகலா அவ்வளவு கோபித்திருக்க வேண்டாம். எனக்கு உன் ஆஞ்ஜெலாவைப் போல இறையன்புதான் முக்கியம் கூறிவிட்டான் உள்ளந்திறந்து. "ஓஹோ! இப்போது ஆஞ்ஜெலா என்னை வெறுத்தொதுக்கிய காரணம் புரிகின்றது. 'அமல்... ஆஞ்ஜெலா' அழகாகத்தான் தொனிக்கிறது. நீங்களிருவருமே ஜோடியாகத் திட்டமோ?..." சந்தேகத்தின் கொடுமுடியில் கேட்டான் சேகர். "சேகர்! என் அருமை நண்பனாகிய நீயா சந்தேகிக்கிறாய்! அதுவும் உன் ஆஞ்ஜெலாவையா? சேகர் அவள் என் சகோதரியெடா சகோதரி" குமுறினான் அமல். "போடா வெளியே! உடைவீட்டுக்கு இரண்டகம் செய்த பாவி!" சேகரின் கைகள் அமலின் கன்னங்களைப் பதம்பார்த்தன. "இறைவா! இதுவும் உன் சோதனையா! ஆருயிராய் நேசித்த சசிகலா என்னைத் துறந்து விட்டாள். அருமை நண்பனும் என்னைச் சந்தேகிக்கின்றான். எல்லாம் உன் அன்பை நாடியதற்குக் கிடைத்த பரிசா" வேதனை பொங்கும் உள்ளத்துடன் வெளியேறினான் அமலன்.

* * *

வாரங்கள் ஓடின. சேகர், ஆஞ்ஜெலா — அமலன், சசிகலா தொடர்பு அறுபட்டே போனது. சசிகலாவின் ஆடம்பரப் போக்கு, உல்லாசவாழ்வு காதலில் தோல்வியுற்றிருந்த சேகரின் உள்ளத்தை ஆட்கொண்டது. அவளுடன் பழகவும் சந்தர்ப்பங்கள் வாய்த்தேயிருந்தன. அவன் மனம் கொஞ்சங்கொஞ்சமாகச் சசிகலாவின்பால் ஈடுபட்டது. அன்றொருநாள் விருந்தொன்றின் போது மனம்விட்டுப் பேசிக்கொண்டனர் இருவரும். "சசிகலா! ஆஞ்ஜெலா— அமலுக்கு அவசியம் ஒருபாடம் கற்பிப்போம். ஆயின் நான் இவை எதற்கும் ஒருகாரணங் காட்டவேண்டுமல்லவா? அவர்கட்கு எம்மில் உண்மை அன்பு உண்டா என்பதைக் கடைசிமுறையாகப் பரிசீலனை செய்வோம். வருகின்ற முதல்வியாழனன்று இரவு நடைபெறவிருக்கும் களியாட்ட விழாவுக்கு வரும்படி நீ உன் அமலனுக்கு அழைப்பு விடு. நானும் ஆஞ்ஜெலாவை அழைக்கின்றேன். அவர்கள் நிச்சயம் மறுத்து விட்டுக் கோவில் வழிபாட்டுக்குச் செல்வர். அதற்கப்புறம் நாம் நம் நிச்சயதார்த்த விழாவை நடத்துதற்கு எவ்வித தடையுமே இராது" என்று சூழ்ச்சிக்கு வழிவகுத்தான். ஆடம்பரப் பிரியை சசிகலாவும் மனப்பூர்வமாகச் சம்மதித்தாள்.

"நீங்கள்என்மேல் வைத்துள்ள அன்புக்கு இன்றுதான் உறுதிகூறப் போகின்றீர்கள். களியாட்டவிழாவுக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். அல்லது நான் வேறொருவன் மனைவி" உறுதியாகக் கூறினாள் சசிகலா. "சசிகலா! என் அன்பு எத்தகையது என உனக்கு உறுதிகூற நற்கருணை நாதர் வழிவகுப்பார். இன்று நான் அவருக்கு ஆறுதல் அளிக்க ஆலயஞ் செல்கிறேன்" விடைபெற்றான் அமல். "வாழ்க்கைக்கே விடைபெற்றுக் கொள்ளுங்கள்" சொல்லிப் பிரிந்தாள் சசிகலா.

* * *

இரவு 11½ மணி. ஆலயத்தில் யேசுவின் ஒடிந்த உள்ளத்துக்கு ஆறுதலளித்துக் கொண்டிருந்தனர் ஆஞ்ஜெலாவும், அமலனும். திடீரென்று யாரோ ஒருவர் ஆலயத்துள் வந்து அமலன்காதில் ஏதோ படபடப்பாகக் கூறினான். அவ்வளவுதான் அமலன் ஆஞ்ஜெலாவை வெளியேவருமபடி அழைத்தான். காத்திருந்த வாகனமொன்று அவர்களை ஏற்றிச் சென்றது. பொதுவைத்தியசாலையின் அறையொன்றில் ஒடிந்த பறவையாக காயங்கள் கட்டுப்போடப்பட்ட நிலையில் அறிவிழந்து மயக்கத்தில் கட்டிலொன்றில் படுத்திருக்கக் காணப்பட்டாள் சசிகலா. கவலையே உருவாய் தலையில் ஒரு பலத்த காயத்துடன் காட்சியளித்தான் சேகர். களியாட்ட விழாவிலிருந்து திரும்பிய சேகர் சசிகலாவின் கதிதான் இது. சேகர் உங்களையா இக்கோலத்தில் காண்கின்றேன். இறைவன் என் சேகரை என்னிடமிருந்து பிரிக்கவில்லை" விபத்தின் விபரத்தை ஏற்கனவே அறிந்திருந்த ஆஞ்ஜெலா பதபதைப்புடன் கூறினாள். பின்னர் நிமிர்ந்துநோக்கினாள். அங்கே சசிகலாவின் உயிர் ஊசலாடும் நிலையில். அமலன் தன் இரத்தத்தைத் தானம் செய்துகொண்டிருந்தான் சசிகலாவின் உடலில் ஏற்றுவதற்கு. அரைமணித்தியாலம் கழிந்தது. விழித்துப்பார்த்த சசிகலா யாவையும் புரிந்துகொண்டாள். அவளருகே அமர்ந்தான் அமலன். "அமல் என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குப் பெரிய துரோகம் செய்யஇருந்தேன். நற்கருணை நாதர் உங்களன்புக்கு நீங்கள் உறுதிகாணச்செய்துவிட்டார். உயிரளித்த உத்தமர் நீங்கள். இனிமேல் நானொரு சிறந்த கத்தோலிக்களாக வாழ்வேன். மரணத்தின் பிடியில்தான் இவ்வுலக சுகபோகங்களின் அநித்தியம் புரிந்தது. என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றாள் சசிகலா. அன்போடு அவளது காயங்களைத் தடவினான் அமல்.

சிறிதுவேளை கழிந்தது. சேகர் அமலிடமும், ஆஞ்ஜெலாவிடமும் மன்னிப்புக் கோரினான். உத்தம கத்தோலிக்கனாக வாழ உறுதியளித்தான். பிரிந்த நண்பர் கூடினர். பிரிந்த ஜோடிப்புறுக்களும் இணைந்தன. இரு திருமணங்களும் ஒரேநாளில், ஒரே ஆலயத்தில் ஒரே பந்தரில் நிகழ்ந்தன. அன்றிலிருந்து மாதத்தின் முதல் வியாழன் இரவு ஆராதனையில் அமல், சசிகலா, சேகர், ஆஞ்ஜெலா ஜோடிகளை நற்கருணை நாதர் பாதத்தில் என்றுமே காணக்கூடியதாயிருந்தது.

**தந்தை தாய் நீ என்றால் ...**

வேத போதக நாடுகட்காக

- ○ குடும்ப செபமாலை சொல்லுகிறாயா?
- ○ வேலைத்தலத்திலும் வீட்டிலும் சிறு ஒறுத்தல் தியாகம் ... ?
- ○ ஞாயிறு காணிக்கையில் கொடுக்க விருக்கும் உறையினுள் ஏதாவது ... ?



## மகளிர் மன்றம்

**அன்புடை நேயர்களே! வணக்கம!........**

மகா அலெக்ஸாந்தர் சரித்திர வரலாற்றிலேயே புகழ் வாய்ந்து விளங்கிய ஒரு பேரரசன். அகில உலகையும் அடக்கியாள வேண்டுமென்று ஆவல் கொண்டான். அவன் படையெடுத்துக் கொண்டு எங்கெங்கே சென்றானோ அங்கங்கெல்லாம் மாபெரும் வெற்றிகளை ஈட்டினான். இத்தகையதோர் பெரிய அரசன் தன் வாழ்க்கையின் மாலைப் பொழுதிலே இவ்வுலகப் பொருட்களின் நிலையாமையை உணர்ந்து கொண்டான். அதனாற் போலும் மரணப்படுக்கையில் இருக்கும் போது தன் சுற்றத்தவர்களுக்கு ஓர் கட்டளையையிட்டான். "நான் இறந்தபின் என் சடலத்தை ஓர் பேழையில் வைப்பீர்களல்லவா? அப்போது எனது கரங்கள் இரண்டும் வெளியே தொங்கிக் கொண்டிருக்கும்படி விட்டுவிடுங்கள். அப்போது தான் எத்தனையோ இராச்சியங்களை அடக்கியாண்ட மாவீரன் அலெக்ஸாந்தர் கூட நித்திய வாழ்வை நோக்கிச் செல்லும்போது வெறுங்கையனாகவே சென்றான் என்பதை என் தேசமக்கள் உணர்ந்து கொள்வார்கள்" என்று கூறினானும்.

ஆம்!...உலகமுழுவதையும் நாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் எம் ஆத்தும நலனுக்கு அதனால் ஏற்படக்கூடிய பிரயோசனமென்ன?... இக்கருத்தை முன்னிட்டே யேசுபெருமானும் ஐசுவரியவானின் உவமையைக் கூறியுள்ளார். தன் பெருந்தொகையான அறுவடையைக் களஞ்சியங்களில் சேர்த்தபின் ஐசுவரியவான் தன் ஆன்மாவை நோக்கி "என் ஆத்துமாவே!.... மகிழ்ச்சியடைவாயாக!......ஏனெனில் நீ உண்டு குடித்து சுகவாழ்வு வாழ வேண்டிய ஆஸ்தி இதோ களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்று கூறினானும். அப்போது "ஏ!...மூடனே! இன்றிரவே உன் உயிரைப் பறிக்க இறைவனின் தூதர்கள் ஆயத்தாயிருக்கின்றார்களே. உன் பெரும் ஆஸ்தியினால் நீ அடையப் போவது யாது?" என்று ஒரு அசரீரி வாக்கு ஒலித்தது. அதன் பிறகே ஐசுவரியவான் தனது அவல நிலையை உணர்ந்து கொண்டான்.

அப்படியானால் நாம் சிந்தித்துச் செயலாற்றவேண்டியதுதான் என்ன?...நித்திய வாழ்வில் கணிக்கப்படுவனதான் எவை?...மாணவ மாணவிகளே!...நீவிர் விஞ்ஞானத்திலும் கணிதத்திலும், புவியியலிலும், சரித்திரத்திலும் என்ன பட்டம் பெற்றீர்களென்றல்ல!...ஆயின் உங்களுக்கு இறைவனளித்த திறமையைச் சோம்பலினால் வீணாக்காது உங்கள் கடமையைக் கண்ணியத்துடன் செய்தீர்களா என்பதுதான் இறைவன் கணிப்பது!...செல்வந்தர்காள்!...நீவிர் எத்தனை மாடிவீடு கட்டினீர்கள்?...வங்கியில் எவ்வளவு பணம் சேர்த்துவைத்தீர்களென்றல்ல!...ஆயின் எத்தனை அநாதைகளுக்கு இல்லிடங்கொடுத்தீர்கள்?......எத்தனை அகதிகளுக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுத்தீர்கள் என்பதுதான் இறைவன் உங்களிடம் எழுப்பப் போகும் வினா? தாய் தந்தையரே!... உங்கள் குழந்தைகளை மேற்படிப்புப் படிக்க வைத்தீர்களா? சீரும் சிறப்பும் செல்வமும் நிறைந்த குடும்பங்களில் அவர்களை வாழவைத்தீர்களா என்பதல்ல!...ஆயின் உங்களுக்கு அளித்த குழந்தைச் செல்வங்களை இறைவனுக்கேற்ற பிள்ளைகளாக வாழவைத்தீர்களா? என்பதுதான் இறைவன் தீர்வை நாளில் உங்களிடம் கேட்கப் போகும் கணக்கு!...மணவாழ்வில் ஈடுபட்டோரே!...நீங்கள் அழகும், இளமையும், ஆஸ்தியும், திறமையும் வாய்ந்த துணைவரைப் பெற்றீர்களா?......என்பதல்ல! ஆயின் இல்லறவாழ்வில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து எவ்வளவு தூரம் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டீர்கள்?...உங்கள் அயலாருக்கு இல்லறதர்மத்துக்கேற்ப எத்தகைய உதவிகளை ஈந்தீர்கள் என்பதுதான் நித்திய வாழ்வுப் பிரச்சினையில் முக்கிய அம்சம்!......

எனவே!...விழித்தெழுவோம்!......செய்வனவெல்லாம் கடவுட் பணியாகச் செய்து புண்ணியங்களைத் தேடுவோம். அப்போதுதான் வாழ்க்கையின் மாலைப்பொழுதைப் புன்னகையுடன் வரவேற்போம். இறைவனிடம் செல்கையில் கை நிறைய, இதயம் நிறைய புண்ணிய செல்வங்களை சுமந்து செல்பவர்களாவோம்.

ரோஜா.

---

ஐயோ, உலகில் பெருந்தன்மையைக் காணோமே என்று வருந்துகிறாயே; அது வேண்டாம்; நீ பெருந்தன்மை யுடையவனாயிரு; அப்பொழுதே பிறரிடம் உறங்கிக் கிடக்கும் பெருந்தன்மை அவர்தம் கண்களில் ஒளிர்வதைக் காணலாம்.

— ஓர் அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி — 1969

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 20-ம். ஞாயிறு | [ப] |
| 13 | திங்கள் | புனித எற்வேட் | [வெ] |
| 14 | செவ்வாய் | புனித கலிஸ்ரஸ் | [சி] |
| 15 | புதன் | புனித திரேசம்மாள் | [வெ] |
| 16 | வியாழன் | புனித கெட்விஜ் | [வெ] |
| 17 | வெள்ளி | புனித மார்கரேத் மரியம்மாள் | [வெ] |
| 18 | சனி | புனித லூக்காஸ் (சுவிசேஷகர்) | [சி] |

# காவலன் கருத்து

## செபமாலைப் பக்தி

செபமாலையைப் பற்றிய அழகிய கதை ஒன்றுளது. தேவதாயின் திருச்சிலைக்குத் தினந்தோறும் ரோசா மலர்மாலையை அணிவித்து மகிழும் இளைஞனொருவன் இருந்தான். அவன் ஒரு சந்நியாச மடத்திற் சேர்ந்த பொழுது தொடர்ந்து இவ்வழக்கத்தைக் கடைப்பிடிக்க இயலாது மனம் வருந்தினன். பின் முதிய சந்நியாசியொருவரின் ஆலோசனையின் பேரில் அம்மலர்மாலைக்குப் பதிலாக செபமாலை சாத்தும் வழக்கத்தை மேற்கொண்டான். ஒருநாள் காட்டுவழியே செல்கையில் வழக்கப்படி முழந்தாளிட்டு செபமாலை ஓதத்தொடங்கினன். அப்போது அவ்வழியே வந்த கள்வர் சிலர் அவனைத் தாக்கும் எண்ணத்துடன் அவனை அணுகினர். ஆனால் ஒரு புதுமையான காட்சி அவர்களைத் திடுக்கிடவைத்தது. ஓர் அழகிய பெண்மணி அவனது வாயிலிருந்து எடுத்த ரோசா மலர்களால் முடியொன்றைச் செய்து சிரசில் சூட்டிக் கொள்வதைக் கண்டனர். அக்காட்சியே அவர்களை மனந்திருப்பியது.

இக்கதை கற்பனையாக இருக்கலாம். ஆனால் செபமாலையின் வல்லமையையும் அதன் இணையற்ற அழகையும் தெள்ளென எடுத்துக் காட்டுகிறது. இது போன்ற ஆயிரமாயிரம் வரலாறுகளைக் கூறலாம். மீளமுடியாத இக்கட்டிலிருந்து செபமாலையினையே புணையாகக் கொண்டு மீண்டவர் வரலாறுகளைச் சரித்திரமே எடுத்துக் கூறுகிறது.

தேவதாயின் திருவருளைப் பெறுவதற்கு எத்தனையோ வழிவகைகள் உள்ளன என்பது உண்மையேயாயினும் செபமாலையைப் போல பெருமளவு மக்களால் கையாளப்பட்டதும் தேவதாயினலேயே வலியுறுத்தப்பட்டதுமான பக்திமுயற்சி வேறு இல்லை எனலாம். தாம் காட்சி கொடுத்த போதெல்லாம் பாவிகள் மனந்திரும்பச் செபமாலை ஓதி வருமாறு கேட்டிருக்கிருள் என்றால் அதன் மகத்துவத்தை என்னென்பது.

எளிமையும் இனிமையும் கருத்தாழமும் கொண்ட இச்செபமானது தனிப்பட்ட வணக்கத்துக்கும் பிரசித்த வணக்கத்துக்கும் உகந்ததாக விளங்குகின்றது. அத்துடன் குழந்தைகள் தொடக்கம் குருமார்வரை, கற்றோர் கல்லாதார் ஆகிய அனைவரும் தத்தம் பக்குவத்திற்கேற்ற வண்ணம் ஓதி பயன் பெறக்கூடிய முறையிலும் அமைந்துள்ளது. விசேஷமாக குடும்பத்தவர் ஒன்றுகூடிச் செபிப்பதற்கு இதைவிடச் சிறந்த செபம் இல்லையெனலாம். ஒன்றுசேர்ந்து செபிக்கும் உள்ளங்களை அன்பில் இணைக்கும் முத்து வடமாக விளங்குகின்றது.

திருவழிபாட்டு மறுமலர்ச்சியால் பற்பல பக்தீ முயற்சிகள் குன்றிவரும் இந்நாட்களில் செபமாலைப் பக்திமட்டும் வலிமைகுன்றாது விளங்குவதைப் பார்க்கும்போது அது பழமையாய்ப் போய்விடவில்லை, இன்றும் புதுமை மெருகுடன் இருக்கின்றது என்பதை உணரலாம்.

செபமாலை வெறும் வாய்ச்செபமன்று. தேவரகசியங்கள் பலவற்றைத் தியானிக்கத் தூண்டும் மனச்செபமுமாகும். தியானத்தின் வழியாக இறைவனைப் பற்றிய அறிவும் அவர்மீது அன்பும் ஊற்றெடுக்கின்றன.

அதுமட்டுமல்ல, செபமாலை ஓர் எதிரொலியை உண்டாக்குகிறது. அது பரலோகத்திலும் ஓதுவோர் உள்ளத்திலும் எதிரொலிக்கின்றது, பரலோகத்திலிருந்து தேவதாயின் திருவருளை பூவுலகிற் சொரியச் செய்கின்றது. மக்கள் இதயத்தில் எழும் எதிரொலி தேவதாயின் புண்ணியங்களைத் தியானிப்பதுடன் நின்றுவிடாது தத்தம் வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்து வாழத் தூண்டுகிறது.

# பேசும் பேனா



### மரணநேரத்திலும்

வயோதிபப் பெண்ணொருத்தியின் மரணப் படுக்கையண்டை ஒரு வாலிபக் குரு அழைக்கப்பட்டார். இறுதிச் சடங்குகளை நிறைவேற்றிய பின் நோயாளிக்குத் தைரிய மூட்ட விரும்பிய குரவர் பாட்டியம்மா பயப்படாதீர்கள். உங்கட்காக நாங்களெல்லாரும் இறைவனைப் பிரார்த்திப்போம் என்றார். கிழவியோ புன்னகையுடனும் தைரியத்துடனும் கம்பீரமாகவும் விடையளித்ததாவது :— சுவாமி, நான் ஏன் பயப்பட வேண்டும்? எனக்கு இப்போது வயது 91. ஏழு வயதிலிருந்து தினசரி ஜெபமாலை சொல்லி வருகிறேன். ஒவ்வொரு பிரியதத்த மந்திரத்திலும் இப்போதும் எங்கள் மரண நேரத்திலும் என்று வேண்டிக் கொள்கிறோம். இப்படி ஒரு நாளில் 53 தடவை ஜெபமாலை நேரத்தில் உச்சரிக்கிறோம். கடந்த 84 வருடங்களாக தினசரி 53தடவைகள் தேவதாயை நோக்கி எங்கள் மரண நேரத்தில் துணையிருக்குமாறு வேண்டியிருக்கிறேன். அந்த இரக்கமுள்ள தாய் என்னைக் கைவிடுவாளா?

### புதிய கண்டுபிடிப்பு

ஜெருசலேம் நகரின் வடகிழக்குப் பகுதியில் புதியதோர் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி வருகிறார்கள். இத்திட்டத்துக்கென ஆழமான கிடங்குகள் அகழப்பட்டபோது கிறிஸ்துநாதரின் காலத்துக் கண்மையில் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒரு சடலத்தின் எலும்புகளை கண்டெடுத்துள்ளனர். இந்த எலும்புகள் யூதரொருவரினது எனவும் அவர் சிலுவையில் குற்றவாளிகள் அறையப்பட்ட காலத்தைச்சேர்ந்தவர் எனவும் சிலுவை மரணதண்டனை பெற்றவர் எனவும் கிரேக்க தொல்பொருளாய்வு நிபுணர் வசிலியோஸ் கூறுகிறார். இந்த நிபுணர் இசிறவேல் ஆட்சியாளரின் ஆதரவில் பழம்பொருள் கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டுள்ளார்.

### சின்னத்தில் குஞ்சங்கள்

ஆட்சியாளர்க்கென தனிப்பட்ட சின்னங்கள் உண்டு. இலங்கை அரசின் சின்னத்தில் வாளேந்திய சிங்கத்தைக் காணலாம். இவ்விதமே மேற்றிராணிமார்கள், கர்தினால்கள், பாப்பரசர்கட்கும் சின்னங்கள் உண்டு. இச்சின்னங்களில் பொது அடையாளங்கள் சிலவற்றையும் காணலாம். கர்தினால்களின் தொப்பி போன்ற அடையாளமொன்று இவர்களின் சின்னத்தின்மேலே காணப்படும். சின்னத்தின் இரு பக்கங்களிலும் பட்டுக் குஞ்சங்களைக் காணலாம். மேற்றிராணிமாரின் சின்னங்களில மூன்று வரிகளில் குஞ்சங்களும் அதிமேற்றிராணியாரின் சின்னங்களில் நான்கு வரியும் கர்தினால்களின் சின்னங்களில் ஐந்து வரிக் குஞ்சங்களும் காணப்படும்.

### 106இல் பாட்டியம்மா

அண்மையில்நியூசிலாந்தில் காலமான திருமதி மார்த்தா தெகொட்டுவா றே அத்தேசத்தின் வயதில் முதிர்ந்த பெண்மணி என்ற சாதனையை சமீப காலம்வரை நிறுவியிருந்தார். இவர் ஒரு கத்தோலிக்கர். அயலவர்க்கு உதவுவதில் இவர் காட்டிய உற்சாகத்தால் நல்ல சமாரித்தார் என அழைக்கப்பட்டார்.

### காலடியில் திங்கள்

அம்புலியின் மரியன்னை என்ற நாமத்துடன் நேப்பிள்ஸ் நகரில் ஒரு பேராலயத்தை அமைக்கப்போகிறார்கள். அப்பல்லோ பதினொன்று சந்திரனை வெற்றிகொண்டதின் நினைவாகவே இந்த ஆலயம் எழுப்பப்படும். இந்த ஆலயத்தில் மரியன்னையின் பாதங்கள் திங்களின் மேல் தவழ்ந்துகொண்டிருக்கும் சொரூபம் ஒன்று நிறுவிநிற்கும். **பகலவனை ஆடையாகவும் சந்திரனை பாத அணியாகவும் பன்னிரு நட்சத்திரங்களை கிரீடமாகவும் கொண்டுள்ள நங்கை** என்ற வாசகம் ஒன்றும் சொரூபத்தின் அடியில் பொறிக்கப்படும்.

### பதினறு வருடங்கள்

கடந்த வருடம் கொலை செய்யப்பட்ட பிரபல அமெரிக்க கருப்பர்களின் தலைவர் மாட்டின் லூதர் கிங் அவர்களின் துணைவி கொரேட்டா கிங் தனது கணவனுடன் பதினறு வருடங்களாக நடாத்திய இல்வாழ்க்கை பற்றியதொரு நூலை வெளியிட்டிருக்கிருள். **மாட்டின லூதர் கிங்குடன் எனது வாழ்க்கை** என்ற இந்த நூல் வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பொஸ்ரன் நகரில் ஒரு கோட்டலில் விருந்துண்ணவந்தபோது சந்தித்த இத்தம்பதிகள் விரைவில் ஒருவரை ஒருவர் உளமார நேசிக்கத் தொடங்கினர். எனக்கு **மனைவியாகவேண்டியஎல்லா**த் தகுதிகளும் உன்னிடத்தில் இருக்கின்றனஎன கொரேட்டாவுக்கு இந்தபிரபலகருப்பர் தலைவர் கூறியபின் அவர்கள் திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையை நடாத்தினர். நாளொரு திருமணமும் பொழுதொரு விவாகரத்துமாக திரியும் அமெரிக்க தம்பதிகளிடையே இவர்கள் பதினறுவருடகாலம் மனமொத்த வாழ்க்கை நடாத்தியது குறிப்பிடத் தக்கதொரு நிகழ்ச்சியல்லவா?

### மகாத்மாவின் பாதையில்

அமெரிக்க நிறப் பிரச்சனையில் கறுப்பர்கட்கு நல்ல முடிவு காணவேண்டி மகாத்மா காந்தியின் அகிம்சா மார்க்கத்தையும் சத்தியாக்கிரக வழிகளையுமே கடைப்பிடித்தார் மாட்டின் லூதர். இதனல் பல இன்னல்கட்கும் ஆளாகவேண்டி யிருந்தது. போராட்டம் மறியல் என மாறிமாறிப் பலபிரச்சனைகளை மாட்டின் லூதர் எவ்வாறு வெற்றிகரமாகச் சமாளித்தார் என்பதையெல்லாம் கொரேட்டா இந்நூலில் மிக விரிவாக விளக்குகிறார். அவரது புதல்வி பாடசாலையில் **மக்களுக்கு நன்மை செய்வதற்காக எனது அப்பா மறியலுக்குப் போகிறார்** எனக் கூறக்கூடிய அளவுக்கு நன்முறையிலும் விவேகமாகவும் பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தாரெனவும் நூல் விவரிக்கிறது,

### எனக்கும் இதே கதிதான்

அதிபர் யோண் கென்னடி டல்லாசில் துப்பாக்கியால சுடப்பட்டபோது மாட்டின் லூதர் கிங் தன்னையழைத்து **எனக்கும் இந்நிலைதான் சம்பவிக்கும்** என்று கூறினராம். அத்தருணத்தில் அவர் கூறியது சரிதான் என எண்ணிய யான் அவரது கரங்களை இறுகப்பற்றிக்கொண்டேன். அத்தினத்திலிருந்து கூடிய அளவு அவரைவிட்டு விலகாதிருக்க முடிவு செய்தேன் எனத் தமது வாழ்வின் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றி உருக்கமாக விபரிக்கும் கொரேட்டா வாசகர்களின் உள்ளங்களையும் நெகிழவைத்துவிடுகிறார். தமது கணவர்பால் அவர் வைத்திருந்த அன்பும், காட்டிய பிரமாணிக்கமும் பல முக்கிய பிரச்சனைகளின்போது அவரிடம் காணப்பட்ட துணிவும் இந்நூலில் நன்கு வெளியாகின்றன.

> **உளமே உலகம்; அது தானே மோட்சத்தை நரகமாக்கவும், நரகத்தை மோட்சமாக்கவும் வல்லது.** —மில்டன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ. ஐப்பசிமீ 11ஆம் உ சனிக்கிழமை அச்சிட்டப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org